சொத்தில் ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் சம உரிமை வழங்க விழைகின்ற 1989 ஆம் ஆண்டு இந்து வழிமுறை உரிமை தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவுக்கு குடியரசுத் தலைவரின் இசைவை எதிர்நோக்கி இருப்பதாகக் கூறி இருந்தார். இந்த அவையிலே அந்த மசோதா கடந்த ஆண்டு 6—5—1989 அன்று நிறைவேற்றப்பட்டு மைய அரசுக்கு 24—5—1989 அன்று அனுப்பப் பட்டது. அந்தச் சட்ட முன்வடிவுக்கு மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் தனது இசைவினை அளித்துள்ளார் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சட்ட முன்வடிவு 18—1—1990 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் நான்காம் பகுதி, இரண்டாம் பிரிவின் சிறப்பு இதழில் தமிழ்நாடு சட்டம் 1/1990 ஆக வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

3. தகவல் கோரல்.

(அ) திருநெல்வேலி — கட்டபொம்மன், சிதம்பரனார், இராமநாதபுரம், காமராசர், மதுரை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட பெரு வெள்ளத் தையொட்டி அரசு சிறப்பு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து :

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டத்தில் அண்மையில் சனவரி மாதம் 7—1—1990 லும் அதைத் தொடர்ந்து 3 நாட்களுக்கு மிகப் பெருமளவில் மழை பெய்ததின் காரணமாக பெருத்த சேதாரம் ஏற்பட்டு பல்லாயிரக் கணக்கான விளை நிலங்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறது. பாதிக்கப்பட்ட அந்தப் பகுதி மக்களுக்கு உடனடி நிவாரணத்திற்காக வேண்டியபோது அரசின் சார்பாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வருகை தந்தார்கள். இதிலே சம்பிரதாயத்திற்காக வரலாறு காணாத பெருமழை என்று சொல்வதை விட அரசுக்கு புள்ளி விவரம் மூலம் நான் சொல்ல விரும்புகிறேன். இதே சனவரித் திங்களில் காமராசர் மாவட்டத்தில் அண்மை வருடங் களிலே எந்தக் காலத்திலும் ஒரு மில்லி மீட்டர் மழை கூட பெய்தது கிடையாது. ஆனால் கடந்த 30 ஆண்டுகளில், இந்த ஆண்டுதான் 1,497 மில்லி மீட்டர் மழை அந்தப் பகுதியில் பெய்தது. அதிலும் குறிப்பாக, காரியாப்பட்டியில் மட்டுமே ஒரே நாளில் ஏறக்குறைய 285 மில்லி மீட்டரும், அதையொட்டி இருக்கிற திருச்சுழியிலே ஏறக்குறைய 273 மில்லி மீட்டரும் பெருத்த மழை பெய்தது, அந்தப் பகுதியிலே குண்டாறுகளில் பெரும் வெள்ளம் ஏற்பட்டு பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங் கள் பாதிக்கப்பட்டு இருக்கிறது. பல நூற்றுக் கணக்கான கிராமங்கள் தீவுகளைப் போல் இருந்தன. சாலைகள் முழுவதும் பழுதடைந்து போய் இருக்கிறது. இந்த மழையின் காரணமாக 7 பேர் அந்தப் பகுதியில் உயிர் இழந்து இருக்கிறார்கள். நூற்றுக் கணக்கான கால்நடைகள் மடிந்து இருக்கின்றன. வெள்ளச்சேதம் எந்த அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்று இன்

னமும் கணக்கிடப்படாமல் இருக்கிறது. ஆகவே வெள்ளச் சேதத்தின் கடுமையின் காரணமாக விவசாய நிலங்கள் பாதிக்கப் பட்டு விவசாயிகள் மிகுந்த துயரத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். போக்குவரத்து ஸ்தம்பித்துப் போய் இருக்கிறது. ஏரி, குளங்கள் இதனால் உடைப்பு ஏற்பட்டு வெள்ளச் சேதம் ஏற்பட்டு இருக் கிறது. 1952—57ல் ஏற்பட்ட புயலில் கூட அந்த மாவட்டம் இவ்வளவு கடுமையான பாதிப்புக்கு ஆளானது இல்லை. ஆகவே இவ்வளவு கடுமையான சேதம் ஏற்பட்டு இருப்பதற்கு ஒரு சிறப்பு அதிகாரியை அனுப்பி சிறப்புத் திட்டத்தின் கீழ் உடனடியாக நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். ஆரம்பத்திலே செய்த நிவாரணப் பணிகளுக்கு அமைச் சரும், மாவட்ட நிர்வாகமும் நம்முடைய முதலமைச்சருடைய ஆணையின்படி உடனடியாக சில வேலைகளைச் செய்தார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். செய்ய இருக்கிற காரியங்கள் மிகப் பெரிய காரியங்கள். செய்யப்பட வேண்டிய காரியங்கள் உடனடியாக காலத்தில் நடைபெற வேண்டும். அதை அரசுக்கு கவனப்படுத்தி என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-30 மணி

*திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 8–1–1990 முதல் 11–1–1990 வரை பெய்த பெரு மழையின் காரணமாக—காமராஜர் மாவட்டத் திலேயும் பெருமழை பெய்து அங்குள்ள கண்மாய்களில் எல்லாம் உடைப்புகள் ஏற்பட்டு—கமுதி வழியாகச் செல்லுகிற குண்டாற் றில், கமுதி ஓரத்தில் இருக்கிற குண்டாற்றில் உடைப்பு ஏற்பட்டு, கமுதி நகரிலும், சுற்று வட்டார கிராமங்களிலும் ஏறத்தாழ 9 அடி உயரத்திற்கு தெருக்களில் தண்ணீர் வந்து, பல ஆயிரக் கணக்கானோர் வீடுகளை இழந்து, அந்த வீடுகளில் வசித்தவர்கள் எல்லாம் மேட்டுப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கெல்லாம் அழைத்துச் செல்லப்பட்டு, எந்தத் திசையிலும் போக்குவரத்தே இல்லாமல், பல சாலைகளிலும் உடைப்பு ஏற்பட்டு, ஒரு 3 நாட் களாக மக்கள் உணவே இல்லாமல் நம்முடைய அரசின் ஆணையின் பேரில்—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி—இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறை கண்காணிப்பாளரும் உணவுப் பொட்டலங்களை ஹெலிகாப்டரில் மக்களுக்குப் போட்டு அந்தப் பகுதி மக்களின் உயிரைக் காப்பாற்றினார்கள். அதற்காக நான் அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 3, 4 நாட் கள் எந்த வித உணவையும் சமைப்பதற்கு இயலாமல் மழை பெய்தது. ஒரே நாளில் மட்டும், வறட்சியான அந்தப் பகுதியில், எங்கள் கமுதி நகரில் மட்டும் அரசாங்கக் கணக்குப்படி ஒரே நாளில் 269 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது. காமராஜர் மாவட்டத்தில் பெய்த மழை அத்தனையும் கமுதி வழியாக வந்து மலட்டாறு என்பதில் கலந்து கடலில் கலக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

1990 சனவரி 20] [திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி]

எனக்குத் தெரிந்த வரையில் 1955 ஆம் ஆண்டு டிசம்பர் 5-ம் நாள் -அப்போது முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பதவியில் இருந்த காலத்தில் - ஏற்பட்ட பெரு வெள்ளத்திற்கு அப்புறம் இப்படிப்பட்ட பெருவெள்ளத்தை நான் இன்றுதான் பார்த்திருக்கிறேன். எங்கே பார்த்தாலும் வெள்ளம். நெடுஞ்சாலைத் துறையில் உள்ள சாலைகள் எல்லாம் உடைப்பு எடுத்து போக்குவரத்தே இல்லை. பொதுப் பணித் துறைக்கும் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் பாத்தியப்பட்ட பல்வேறு கண்மாய்கள் அத்தனையும் உடைப்பு ஏற்பட்டு சேதமடைந்திருக்கின்றன. ஏறக்குறைய பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் சேதமடைந்திருக்கின்றன. அறுவடையாகிற கால கட்டத்தில் இந்தப் பெரு வெள்ளம் ஏற்பட்டதன் காரணமாக அந்த நிலங்களில் இருந்த பயிர்கள் எல்லாம் அழிந்து போயிருக் கின்றன. பருத்தி, மிளகாய், மல்லி மற்றும் உளுந்து போன்ற பயிர்கள் எல்லாம் அழிந்து போயிருக்கின்றன. அந்த அளவுக்குப் பெருத்த சேதம் அங்கே ஏற்பட்டிருக்கின்றது. முதுகுளத்தூர் கமுதி பகுதிகளிலும், காமராஜர் மாவட்டத்தைச் சார்ந்த திருச்சுழி பகுதியிலும் ஒரே வெள்ளக்காடாகி இருந்தன. எந்தவிதமான நிவாரணப் பணிகளையும் மேற்கொள்ள முடியாது இருக்கிற நிலையில் வெள்ளச் சேதம் அதிகம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், ஏற்கெனவே அரசு அதிகாரிகள் ஓரளவுக்கு நிவாரணப் பணிகளைச் செய்திருந்தாலும், துரித துயர் துடைப்புப் பணிகளில் என்னுடைய பணிவான கோரிக்கை - மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது -நிவாரணப் பணிக்கு என்று தனியாக ஒரு நெடுஞ்சாலைக் கோட்டம், ஒரு பொதுப் பணிக் கோட்டம் ஒன்றை உருவாக்கி பல கோடிக்கணக்கான ரூபாய்க்கு சேதம் ஏற்பட்டுள்ள பொதுப் பணித்துறை வேலைகளையும் நெடுஞ்சாலைத்துறை வேலைகளையும் துரிதப்படுத்தவும், விவசாயப் பயிர்கள் அழிந்தும், வீடிழந்தும், உணவுப் பொருள்கள் இன்றி, உடை இன்றி இருப்பவர்களுக்கு உதவும் நோக்கத்தில் போர்க்கால நடவடிக்கை போல் — மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1972 ஆம் ஆண்டு வறட்சியில் செய்த பணிகளைப் போல — ஜீவனாம்சக் கடன், தக்காவி கடன் போன்ற வசதிகளையும் செய்து தர வேண்டுமென்றும், வீடிழந்த ஆதி திராவிட மக்களுக்கு வீடுகளைக் கட்டித் தந்தும் உதவிட வேண்டுகிறேன்.

அவர்களுக்கு வீடு கட்டித் தருவதில் சில சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. பேரூராட்சியில் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு தாட்கோ மூலம் வீடு கட்டித் தருகிற திட்டம் இப்போது அரசிடம் இல்லை. ஆகவே, கமுதி போன்ற பெரிய பஞ்சாயத்துகளில் வாழ்கிற ஆதிதிராவிட மக்களுக்கும் தாட்கோ மூலம் வீடிழந்தவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க விசேஷ அனுமதி வழங்கியும், வெள்ள நிவாரணப் பணிகளையெல்லாம் துரிதமாகச் செய்யவும் ஆணையிட வேண்டும். இதற்குமுன் நாங்கள் மாற்றாந்தாயக் குழந்தைகளாக பல ஆண்டுகளாக எங்கள் பகுதி ஒதுக்கப்பட்டிருந்த காரணத்தால் இப்போதுள்ள மாண்புமிகு

[திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி] [1990 சனவரி 20

முதலமைச்சர் அவர்கள் — எல்லோருக்கும் தாய் உள்ளத்தோடு கேட்டதைக் கொடுப்பவர் — தாராள மனம் படைத்தவர் — ஏழையெளிய மக்கள் மீது இரக்கம் கொண்டவர்கள் — ஆகவே பாகுபாடில்லாமல் எங்கள் பகுதியை கவனத்தில் கொண்டு நல்ல பல நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு என்று ஒரு தனி அலு வலரை விசேஷ வெள்ள நிவாரண ஆணையராக நியமித்து, துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று என் பகுதி மக்கள் சார்பாகவும் என் சார்பாகவும் பணிவாக மாண்புமிகு முதலமைச் சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் சேரன்மாதேவி தொகுதியில் பாப்பாக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட பாப்பாக்குடி, முக்கூடல், மருதமுத்தூர், சிங்கம்பாறை, மைலபுரம், சடைய புரம், சண்டப்பட்டி, காத்தபுரம், ஓடைமறிச்சான் போன்ற கிராமங்களில் கடும் மழையினால் - வரலாறு காணாத மழையி னால் 6 -1 -1990 முதல் 4 நாட்கள் தொடர்ந்து பெய்த மழை யால் - மழைக் காலத்தில் கூட பெய்யாத மழை இந்த கால கட்டத்தில் பெய்த காரணத்தால் - எல்லாக் கண்மாய்களும் உடைந்து, திறக்கப்பட்ட அணைகள் எல்லாம் மூடப்பட்டு — காரணம் தண்ணீர் அதிகமான அளவுக்கு வந்ததால், அங்கே

10-35 மணி

போக்குவரத்தே பாதிக்கப்பட்டது. எல்லாச் சாலைகளும் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. எல்லாத் தாம்போதிகளும் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, ஊருக்குள் எல்லாம் தண்ணீர் வந்துவிட்டது. முக்கூடல் ஊரே மூழ்கியது; மருதமுத்தூர் ஊரே மூழ்கியது. நான் சொன்ன அத்தனை ஊர் களும் மூழ்கின. காரணம், அத்தனையும் தாழ்வான பகுதியிலே இருக்கின்றன. சுற்றிலும் குளங்கள் இருக்கின்றன.

இன்றைக்குப் பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது— எல்லாத் தாம்போதிகளும் அடித்துச் செல்லப்பட்ட காரணத்தி னால் — முதலமைச்சருக்கு ஞாபகம் இருக்குமென்று எண்ணு கிறேன், நான்கு மாதங்களுக்கு முன்பு நீங்கள் வந்து திறந்து வைத்த கோபாலசமுத்திரம் பாலம் ஒன்றின் வழியாகத்தான் நெல்லை மாவட்டத்திலுள்ள அத்தனை போக்குவரத்து வாக னங்களும் சென்றன என்பதை — காரணம் அது உயர்வான பாலம், மற்ற தாம்போதிகளெல்லாம் அடித்துச் செல்லப்பட்டு, சில தாம்போதிகளுக்கு மேல் தண்ணீர் வந்த காரணத்தினால் மக்கள் அவதிக்கு உள்ளானார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் வீடு இழந்து இருக்கிறார்கள். குறிப்பாக ஆதிதிராவிட மக்கள் வீடு இழந்து இருக்கிறார்கள். குடிசைகள் அடித்துச் செல்லப் பட்டன.

1990 சனவரி 20] [திரு. பி. எச். பாண்டியன்]

கலியன்குளம் என்ற ஒரு கிராமம். 300 மக்கள் வாழக்கூடிய மக்கள் அவ்வளவு பேரும் வீடுகளை இழந்திருக்கிறார்கள். நான் நான்கு நாட்கள் அங்கேபோய் நேரடியாக அத்தனை பகுதிகளையும் பார்த்து விட்டு எனக்கு முன்னால் மாவட்ட ஆட்சித் தலைவரும் பார்த்து விட்டார். அரசாங்கத்திற்கு அறிக்கை தந்திருப்பார் என்று எண்ணுகிறேன். அவர்களள் நேரடியாகப் பார்த்து நிச்சயமாக முதலமைச்சரவர்களிடத்தில் போய்ச் சொல்லுவேன். அவர்களும் உங்களுக்குப் பரிகாரம், நிவாரணம் அளிப்பார் என்று சொல்லிவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன். ஆகவே, வீடு இழந்தவர்களுக்கு வீடும், இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கப்பாண்டியன் அவர்கள், காதர் பாட்சா அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போல இந்தப் பகுதியிலே ஒரு தனிக்கோட்டத்தை, இல்லாவிட்டால் இருக்கக் கூடிய நெடுஞ்சாலைக் கோட்டத்தையே உடனடியாக அந்தப் பகுதியிலுள்ள சாலைகளைச் செப்பனிடவும், அந்தப் பகுதியில் அழிந்து போன தாம்போதிகளை உடனே சீர்படுத்தவும் உத்தர விட வேண்டுமென்றும், அதற்கு நிவாரணத் தொகையை — பல கோடி வரும் — நீங்கள் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று, இன்றைக்குக் கடையத்திலிருந்து முக்கூடல் வரை போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது. கடையம்-முக் கூடல் சாலையே தடைபட்டிருக்கிறது. கடையம்-ஆலங்குளம் சாலையும் தடைபட்டிருக்கிறது. இது முப்பது கிலோ மீட்டர் : அது முப்பது கிலோ மீட்டர். ஆகவே, இன்றைக்குத் தொடர்பே துண்டிக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்திலும், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களிடத்திலும் மக்கள் கொடுத்த மனுக்களைக் கொடுத்திருக்கிறேன். நீங்கள் உடனே இங்கே பார்த்து, வீடு இழந்தவர்களுக்கு தலா எவ்வளவு, இன்னும் வீடு இடிந்தவர்களுக்கு ரிப்பேர் செய்வதற்கு எவ்வளவு கொடுக்கப் போகிறீர்கள் என்பதை இங்கே அறிவித்து விடுவீர் களானால் உண்மையிலேயே நான் மக்களின் சார்பில் நன்றி யுடையவனாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுடைய நிவாரணத் தொகையை எதிர் நோக்குகின்றேன். நான் சொல்லிவிட்டு வந்திருக்கின்றேன், உடனே நீங்கள் செய்வீர்கள் என்று. நீங்கள் செய்வீர்கள் என்றுதான் சொல்லி விட்டு வந்திருக்கிறேன். ஆகவே, முதலமைச்சரவர்கள் நிவாரணத் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டு கொண்டு அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே விஷயமாக ஏற்கனவே நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற முறையிலே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். ஆனால் இன்றைக்கு அது சம்பந்தமாக முழுமையான ஒரு

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1990 சனவரி 20

விவாதமாக நடைபெறுகின்ற அளவிற்கு எல்லோரும் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே நாங்கள் அறிந்த வரையில் சரியான முறையில் நிவாரணப் பணிகள் இதுவரை துவக்கப்படவில்லை என்ற குறைபாடுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த நிவாரணப் பணிகளை உடனடியாக அந்த மக்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை ஒரு அறிக்கையின் மூலமாகத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலும், மதுரை மாநகரிலும் சமீபத்தில் பெய்த கடுமையான மழையினால் மிகுதியான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே, மதுரை மாநகரில் இருக்கின்ற சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குடிசைவாழ் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோன்று, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தொகுதியில் சமீபத்தில் பெய்த கடுமையான மழையால், அங்கே உசிலம்பட்டி கண்மாய், கருக்கட்டாம்பட்டி கண்மாய், கொருக்குமேட்டுப்பட்டி கண்மாய், டி. இராமநாதபுரம் கண்மாய் என்று ஏராளமான கண்மாய்கள் உடைந்துவிட்டன. ஏராளமான கண்மாய்கள் உடைந்த காரணத்தினால் அந்தந்த கிராமங்களிலே நூற்றுக் கணக்கான வீடுகளை இழந்து விட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த வெள்ளச் சேதத்தால் நூற்றுக் கணக்கான ஏக்கர் நெல் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே உசிலம்பட்டி தாலுக்காவில் இருக்கின்ற சாலைகள் மிகமிக மோசமாக இருந்த நிலையில், இந்தக் கடுமையான மழையின் காரணத்தினால், இருந்த சாலையும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, உசிலம்பட்டி தொகுதியிலே வாழ்கின்ற மக்களும், மதுரை மாவட்டத்திலே வாழ்கின்ற மக்களும் அங்கே மிகுதியான வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்குத் துரிதமான நிவாரண நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மூலம் இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

10–40 மணி

மதுரை மாவட்டத்தில், எப்படி மனித வர்க்கத்திற்கு காலரா, பிளேக் நோய்கள் மிகப் பெரிய ஆபத்தான சூழ்நிலையை ஏற்படுத்துமோ அதைப் போல பருத்தி விவசாயம் புளுட்டோனியா என்ற நோயால் பாதிக்கப்பட்டு மிகப் பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பருத்தி விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இரண்டாண்டுகளுக்கு முன்னால் ரூபாய் 50 கோடியிலிருந்து 60 கோடி வரையில் மதுரை மாவட்டத்தில் பருத்தி விவசாயம் பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டும் பருத்தி விவசாயம் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பாதிக்

கப்பட்டிருப்பதால் விவசாயிகளிடத்தில் மிகப் பெரிய பீதி ஏற்பட்டிருக்கிறது. பிளேக், காலரா நோய் ஏற்பட்டால் எப்படி மனித வர்க்கம் பயப்படுமோ அதைப்போல மதுரை மாவட்டத்தில் விவசாயிகளிடத்தில் மிகப் பெரிய பீதி ஏற்பட்டிருக்கிறது. அதற்கும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கையெடுத்து பருத்தி விவசாயிகளைப் பாதுகாக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்த ஆண்டு ஜனவரித் திங்களில் தென் பகுதி மாவட்டங்களில் வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்தம் காரணமாக 6–1–1990, 7–1–1990, 8–1–1990 மற்றும் 9–1–1990 ஆகிய நாட்களில் பெரும் மழை பெய்தது. இதில் குறிப்பாக இராமநாதபுரம், காமராசர், திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார் போன்ற மாவட்டங்கள், மதுரை மாவட்டத்தின் சில பகுதிகள் பெரு வெள்ளத்திற்குள்ளாகி பெருத்த சேதம் ஏற்பட்டதைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கபாண்டியன் அவர்களும், காதர்பாட்சா அவர்களும், நமது முன்னாள் சபாநாயகர் பாண்டியன் அவர்களும் உகம்சந்த் அவர்களும், வல்லரசு அவர்களும் வேதனையோடு கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இந்த அரசு உடனடி நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டுமென்று தங்களது கருத்துக்களை வற்புறுத்தி, நிச்சயம் இந்த அரசு செய்யும் என்ற நம்பிக்கையையும் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கடும் மழை வருவதை முன்பாகவே அறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்ததால் சேதம் ஓரளவிற்குக் குறைவாகவே ஏற்பட்டிருக்கிறது. பெரும் மழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணம் வழங்குவதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வெள்ளத்தால் முழுவதுமாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூபாய் 400, ஓரளவு பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூபாய் 200, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு புடவை, ஒரு வேட்டி, ஆகியவை மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்பட்டன. இறந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 2,000 வீதம் மான்யம் நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து நிவாரணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இங்கே பேசிய நமது மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் சபாநாயகர் அவர்கள் தனது தொகுதியில் ஏற்பட்ட சேதத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டையில் மட்டும் ஜனவரித் திங்களில் நான்கு நாட்களில் 15 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளது.

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1990 சனவரி 20

10–45 மணி

சேரன்மாதேவித் தொகுதி முக்கூடல், பாப்பாக்குடி கிராமங்களில் 433 குடிசைகள் சேதம் அடைந்தன. அவற்றின் உரிமையாளர்களுக்கு 1.64 இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டு இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுத் தொண்டு நிறுவனங்களின் மூலம் பாத்திரங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. உடைப்பு எடுத்த 4 குளங்களை சீரமைக்கும் வேலை துவங்கப்பட்டு உள்ளது. 41 ஏக்கரில் நெற்பயிர் பாதிக்கப்பட்டு உள்ளது. இவைகளை எல்லாம் கணக்கிலே எடுத்து முறையான விவரங்களைச் சேகரித்து மீண்டும் நிவாரணப் பணியில் ஈடுபடுவதற்கு, அதைத் துரிதப்படுத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை மெத்த மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல வேளையாக உயிர்ச்சேதம் அதிகப்படியாக இல்லை. கால்நடைகள் ஓரளவிற்கு அடித்துச் செல்லப்பட்டு இருக்கக்கூடும். அதை இழந்தவர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் சாலைகள் சீரமைக்கப்பட வேண்டும் என்றும் பாதைகள் செப்பனிடப்பட வேண்டும் என்றும், பல இடங்களில் பாதையே இல்லாமல் போயிற்று என்றும் தெரிவித்தார்கள். தெரிவித்துவிட்டு, அதற்குக் கோடிக் கணக்கான பணங்கள் ஆகும், அதை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தாராளமான கருத்தையும் வளமாக வழங்கியிருக்கிறார்கள். எந்தெந்த அளவிற்கு உதவ வேண்டுமோ, அந்தந்த அளவிற்கு உதவுகின்ற தாராள மனப்பான்மை பெற்ற உள்ளத்திற்குச் சொந்தக்காரர்கள்தான் இந்த அரசை தலைமையேற்று நடத்துகிற கலைஞர் அவர்கள் தான் என்பதை நான் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நடைபெற்றுவிட்ட சம்பவம் அனைவராலும் வருத்தத்தோடு கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, நான் விவரத்திற்குள் நுழைய விரும்பவில்லை. ஏன் என்றால் விவரங்கள் இன்னும் சேகரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அருமை நண்பர் பாண்டியன் அவர்கள் தெரிவித்தது அவரது கணக்கு. பொதுவாக முற்றிலுமான கணக்குகளை அரசுக்குத் தருவதற்கு அதிகாரிகள் பணிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுடைய கணக்குகள் வந்ததற்குப் பிறகு, எப்படிச் செய்யப்பட வேண்டுமோ, அப்படிச் செய்வதற்கு இந்த அரசு முன்வரும்.

இவ்வளவு கோடி எங்களுக்குத் தேவை என்று உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைகளை எழுப்புகிறபோது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் வருவாய்த்துறை அமைச்சனே தவிர,

பணத்தைச் செலவு செய்கின்ற, வழங்குகின்ற உரிமை படைத்தவர் முதலமைச்சர், நிதியமைச்சர் என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். ஆக, அந்தத் துறையின் சார்பாக பதில் சொல்கிற உரிமை அவர்களுக்கு உண்டு. அவர்களுக்கு நான் வழிவிட்டு அமர்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்து இருக்கின்ற இந்த நிகழ்ச்சிகளைப் பற்றி மைய அரசுக்கு ஏதாவது அறிக்கை அனுப்பப்பட்டு இருக்கிறதா? இது சம்பந்தமாக ஏதாவது மதிப்பீடுகள், உதவிகள் தேவை என்று மைய அரசிடம் மாநில அரசு கோரிக்கையாக ஏதாவது வைத்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு அங்கே விவசாயமே முழுவதுமாக பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக அங்கே கடன்கள் முழுவதையும் ரத்து செய்வதற்கும், மீண்டும் விவசாயத்தைச் சீர் செய்வதற்கும், சாலைகளைச் செப்பனிடுவதற்கும், அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார், காமராஜர் இராமநாதபுரம், மதுரையில் சில பகுதிகள், அங்கே ஏற்பட்ட வெள்ளச் சேதம் குறித்து, செங்கை-அண்ணா மாவட்டத்திலேயிருந்தபோதிலும் கூட நண்பர் திரு. உகம்சந்த் அவர்கள் மிகுந்த அக்கறையோடு சில விவரங்களைக் கூறியிருப்பதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வெள்ளச் சேதம் குறித்து, நம்முடைய பேரவையினுடைய முன்னாள் தலைவர் மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தங்கபாண்டியன், அவர்களும். திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி அவர்களும், திரு. வல்லரசு அவர்களும், அந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் பாதிப்புகளை மிக விளக்கமாக இங்கே எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.

10–50 மணி

நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் என்னென்ன துயர்துடைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது குறித்து இங்கே விளக்கியிருக்கிறார்கள். இந்தச் சேதங்கள் குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு புள்ளி விவரங்களை அனுப்பியிருக்கிறதா, உதவி கோரியிருக்கிறதா என்று கேட்டார்கள். அப்படி இந்தச் சேதத்திற்கு அனுப்பத் தேவையில்லை என்று நாம் கருதுகிறோம். இது மாநில அளவில் ஏற்பட்ட ஒரு பாதிப்பாக இருக்குமேயானால் மத்திய அரசு உதவிகளைக் கோருவதிலும் பொருத்தம் இருக்கக் கூடும். மாநில அரசு பார்த்து அந்த நிவாரணப் பணிகளை நடத்த

முடியும் என்ற காரணத்தினால் அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. காமராசர் மாவட்டத்திலே மாத்திரம் பெய்த மழை, நண்பர் தங்கபாண்டியன் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல கடந்த ஜனவரி மாதத்திலே 31 சென்டி மீட்டர், ஆனால் இந்த ஜனவரி மாதத்திலே 149 சென்டி மீட்டர் என்பதை ஒப்பிட்டுப்பார்க்கும்போது எவ்வளவு பெரிய வெள்ளப் பாதிப்புக்கு அந்த மாவட்டம் உள்ளாகி இருக்கக்கூடும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும். இதுபோன்று அந்த அளவுக்கு இல்லாவிட்டாலுங்கூட பெருமளவுக்கு மற்ற மாவட்டங்கள், இராமநாதபுரம், சிதம்பரனார், நெல்லை-கட்டபொம்மன், மதுரையிலே சில பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு ஒரு சிறப்பு அதிகாரியை நியமித்து விவரங்களைத் தெரிந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்து இங்கே கூறப்பட்டது. ஏற்கெனவே காமராசர், இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு திரு. சி. தங்கராஜ், ஐ.ஏ.எஸ்., நில நிர்வாக ஆணையாளர் அவர்கள் தனி அலுவலராகவும், திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களுக்கு திரு. ஏ. எஸ். பத்மநாபன், ஐ.ஏ.எஸ்., போக்குவரத்து ஆணையாளர் அவர்கள் தனி அலுவலராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல அவர்கள் மேலும் விவரங்களைச் சேகரித்து அரசுக்குத் தருவார்கள். நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த வெள்ள பாதிப்பு ஏற்பட்ட சில மணி நேரத்திற்குப் பின்னர் தகவல் எனக்கு அறிவிக்கப்பட்டு நான் உடனடியாக தலைமைச் செயலாளரோடும் மற்ற அரசு அதிகாரிகளோடும் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாகப் பாதுகாக்க ஹெலிகாப்டர் போன்றவைகளை எல்லாம் அனுப்பி வைக்கின்ற ஏற்பாடுகளை உடனடியாக நான் செய்தேன். நம்முடைய உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அவரும் உரிய ஏற்பாடுகளை அங்கே செய்திருக்கின்றார். நம்முடைய நண்பர் பி. எச். பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மிகுந்த அக்கறையோடு அந்தப் பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். பொதுப்பணித் துறையின் சார்பாக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, பொதுப்பணித்துறை அதிகாரிகளை எல்லாம் அந்தப் பகுதிகளுக்கு அனுப்பி வைத்து இருக்கின்றார். இவ்வளவும் போதவில்லை, மேலும் பல நிவாரணங்கள் தேவை என்று கவன ஈர்ப்பு என்கின்ற பெயரால் இங்கே கொண்டுவரப்பட்ட கருத்துக்கள் இந்த அரசினால் அலட்சியப்படுத்தப்படக் கூடியவை அல்ல. அக்கறையோடு கவனிக்கப்பட வேண்டியவை. அதற்கு எடுத்துக்காட்டாக இந்தப் பணிகளுக்காக முதல் கட்டமாக ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்படுகிறது என்ற மகிழ்ச்சியான ஒரு செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து தேவையான உதவிகள் செய்யப்படும் என்பதையும் நான் கூறிக்கொள்கிறேன்.

1990 சனவரி 20]

10–55 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, இப்போதுதான் எனக்கு இந்தத் தகவல் கிடைத்தது. எனது அருகில் உட்கார்ந்திருக்கிற நமது சட்ட அமைச்சர் தொகுதி உடுமலைப்பேட்டையும் பெருத்த மழையினால் பாதிக்கப்பட்டது என்றும், அதற்கும் உதவுவதற்கு முதலமைச்சர் அவர்களிடம் நீங்கள் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். முதலமைச்சரிடம் அந்த வேண்டுகோளை நான் வைக்கிறேன்.

(ஆ) தஞ்சை மாவட்டத்திலுள்ள கரும்புப் பண்ணைக் கழக நிலங்களை ஏற்கெனவே அதிலே பணியாற்றிய நிலமற்ற தொழிலாளர்களுக்கும் வழங்கவேண்டுமென வற்புறுத்தி சர்வோதயத் தலைவர் உண்ணா நோன்பு இருப்பது குறித்து.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பற்றியும் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற உண்ணா நோன்பு பற்றியும் நான் சிறு எண்ணத்தை, கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு வர இருக்கிறேன். ஏனென்றால் திருக்குவளையும், சுந்தரபெருமாள்கோயிலும், கும்பகோணமும் சேர்ந்து 3 முக்கிய இடங்களைப் பெறுகின்ற ஒரு சட்டமன்றமாகவும், அரசாகவும் இருக்கிறது. ஆளுகிற முதலமைச்சர் அவர்கள் திருக்குவளை என்றால் எதிர்க்கட்சித் தலைவர் ஆக இருப்பவர் கும்பகோணம். எங்கள் சட்டமன்ற கட்சித் தலைவராக இருக்கின்றவர் சுந்தரபெருமாள்கோயில்.

இந்தத் தஞ்சாவூரிலே வடபாதி மங்கலத்திலே சோழச்சிபுரத்திலே செயலிழந்துள்ள கரும்பு பண்ணையில், அரசுக்குச் சொந்தமான ஒரு கார்ப்பொரேஷனில் இருக்கிற அந்த நிலங்களை நிலமற்றவர்களுக்கு பகிர்ந்துக் கொடுக்கவேண்டும் என்பதற்காக உண்ணாநோன்பு இருக்கிறார் பூதான இயக்கத் தலைவர் ஜகன்னாதன் அவர்கள். அதிலே, பகிர்ந்துக்கொடுக்க வேண்டும் என்பதிலே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள் என்பதை நேற்று விளக்கமான பதிலின் மூலம் இங்கே தெரிவித்தார்கள்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

என்ற திருக்குறளையும் படித்து அழகாகச் சொன்னார். எனவே, எவ்வளவு கொடுப்பது என்பதிலே தான் கொஞ்சம் வேறுபாடு இருப்பது போல் எனக்குத் தோன்றுகிறது.

அவர்கள் உண்ணா நோன்பு இருப்பவர்கள் சார்பிலே சொல்லப்படுவது என்னவென்றால் ஏற்கெனவே ஒவ்வொருவருக்கும், அதாவது அதிலே வேலை பார்த்து வேலை இழந்தவர்கள்,